**செய்தி வெளியீடு எண்: 889** **நாள்: 10.12.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (10.12.2018) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், தளவனூர் கிராமம் மற்றும் கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், எனதிரிமங்கலம் கிராமம் ஆகிய கிராமங்களுக்கிடையே பெண்ணையாற்றின் குறுக்கே 25 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள அணைக்கட்டுக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், பொதுப்பணித் துறை சார்பில் 96 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய நீர்வள திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 36 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நிறைவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், புதிய நீராதாரங்களை உருவாக்கிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, நீர்வள ஆதாரத் துறை மூலமாக பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், தளவனூர் கிராமம் மற்றும் கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், எனதிரிமங்கலம் கிராமம் ஆகிய கிராமங்களுக்கிடையே பெண்ணையாற்றின் குறுக்கே, சுமார் 376.6 மீட்டர் நீளம், 3.10 மீட்டர் உயரத்தில் நபார்டு நிதியுதவியுடன் 25 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள அணைக்கட்டுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு வரும்பொழுது 87 செறிவூட்டும் கிணறுகள் மற்றும் 2114 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், எண்ணூர் முதல் எர்ணாவூர் குப்பம் வரையில் (பாகம் 2) எண்ணூர் ஆற்றின் முகத்துவாரத்தில் மண் அரிப்பை தடுத்து, அப்பகுதியிலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், 38 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள 9 தொடர் தூண்டில் வளைவுகள்;

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், கூடலூர் கிராமத்தின் அருகே வெள்ளாற்றின் குறுக்கே சுமார் 200 மீட்டர் நீளம், 1.5 மீட்டர் உயரத்தில் 15 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தடுப்பணை; விருத்தாசலம் வட்டம், பரவலூர் கிராமத்தின் அருகே மணிமுத்தாற்றின் குறுக்கே, 55 கிணறுகள் ஊடுருவல் முறையில் செறிவூட்டப்பட்டு 160 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், 160 மீட்டர் நீளம், 1.25 மீட்டர் உயரத்தில், 10 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சின்னாரம்பட்டி கிராமம், அருகே பாம்பாற்றின் குறுக்கே 21 கிணறுகள் மூலம் 62 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், 40 மீட்டர் நீளம், 1.50 மீட்டர் உயரத்தில், 2 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை; அரக்கோணம் வட்டம், நெமிலி மற்றும் அசநெல்லிகுப்பம் கிராமத்தின் அருகே கல்லாற்றின் குறுக்கே, சயனவரம் ஏரிக்கு நீர் வழங்கிடவும், 11 ஏரிகள் ஊடுருவல் முறையில் செறிவூட்டப்பட்டு 2340 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையிலும், சுமார் 210 மீட்டர் நீளம், 1.5 மீட்டர் உயரத்தில் 9 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள அணைக்கட்டு; அணைக்கட்டு வட்டம், கருங்காலி கிராமம், அகரம் ஆற்றின் குறுக்கே 120 கிணறுகள் மூலம் 428.42 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், 60 மீட்டர் நீளம், 1.50 மீட்டர் உயரத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், அரசம்பட்டில், பாரூர் கிராமத்தில், பெண்ணையாற்றின் குறுக்கே 84 கிணறுகள் மூலம் 508 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், 137.80 மீட்டர் நீளம், 1.50 மீட்டர் உயரத்தில், 8 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், தெள்ளூர் கிராமத்தின் அருகே பாலாற்றின் உபநதியான செய்யாற்றில், 179.24 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், சுமார் 145 மீட்டர் நீளம், 1.20 மீட்டர் உயரத்தில், 5 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தடுப்பணை;

என மொத்தம் 121 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நீர்வள ஆதாரத் துறை திட்டங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை கிராமத்தில், பெரியகுளம் நகருக்குள் வெள்ளப்பெருக்கினால் சேதம் ஏற்படாமல் இருக்கவும், கழிவுநீர் ஆற்றில் கலக்காமல் இருக்கவும், வராகநதி ஆற்றின் கரையை 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பலப்படுத்தி கட்டப்பட்டுள்ள தடுப்புச் சுவர்;

சிவகங்கை மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சி மற்றும் திருப்புவனம் பேரூராட்சியில் குடிநீரேற்றும் நிலையம் மற்றும் வைகை ஆற்றின் இருபுறமும் உள்ள ஆழ்துளை மற்றும் திறவை கிணறுகளின் நீர் செறிவூட்டும் திறனை மேம்படுத்தி சுமார் 1329 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், திருப்புவனம் பேரூராட்சி பகுதியில் வைகை ஆற்றின் குறுக்கே 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை;

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டத்தில் தொட்டியபட்டி, நெடுமதுரை, நெடுமதுரை புதுக்குளம், பெரியகூடக்கோயில் மற்றும் அதன் கீழ் உள்ள கண்மாய்களின் மொத்த ஆயக்கட்டான 510 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதி செய்யும் வகையில், திருப்பரங்குன்றம் வட்டத்தின் நிலையூர் நீட்டிப்பு வாய்க்காலிலிருந்து தொட்டியபட்டி கண்மாய் மற்றும் நெடுமதுரை கண்மாய்களுக்கு 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பிரிவு வாய்க்கால்;

திருச்சிராப்பள்ளியில், சுமார் 13728.68 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், 60 பேர் அமரும் வகையில் நவீன ஒளி, ஒலி அமைப்புடன் கூடிய பயிற்சிக் கூடம், கணினி பயிற்சிக்கூடம், இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் அலுவலகங்கள், பயிற்சியில் கலந்து கொள்வோர் தங்குவதற்கு ஏதுவாக 8 தங்கும் அறைகள், பயிற்சியாளர்களுக்கான உணவு அருந்தும் கூடம், சமையற்கூடம், பல்நோக்கு கூட்ட

அரங்கம், குடிநீர் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் 3 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையக் கட்டடம்;

திருச்சிராப்பள்ளியில், 20,383 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன், 6 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொதுப்பணித்துறையின் திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அலுவலகக் கட்டடம்;

என மொத்தம் 36 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொதுப்பணித் துறையின் நீர்வள திட்டங்கள் மற்றும் அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி. சண்முகம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நீர்வள ஆதாரத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.எம். பக்தவத்சலம், பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.எஸ். மனோகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 10.12.2018.**